# <u>தாரமங்கலம் நகராட்சி</u>
## <u>நகர்மன்ற சாதாரண கூட்டம்</u>
## <u>நகர்மன்ற தலைவர் அவர்களால் கொண்டு வரப்படும் தீர்மானம்</u>

2023 ஆம் ஆண்டு ஜீன் மாதம் 02 ஆம் தேதி வெள்ளிகிழமை பிற்பகல் 3.00 மணிக்கு தாரமங்கலம் நகர்மன்றத்தின் சாதாரணக்கூட்டம் நகராட்சி மன்ற கூட்ட அரங்கத்தில் நடைபெற உள்ளதால் அனைத்து வார்டு உறுப்பினர்களும் தவறாது கலந்து கொள்ளுமாறு அன்புடன் கேட்டுக்கொள்கிறேன்.

முன்னிலை :– திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,
நகராட்சி மன்ற தலைவர்,
தாரமங்கலம் நகராட்சி.

**பொருள் எண்.462 (1)**

தாரமங்கலம் நகராட்சி பகுதிகளில் மே 2023 ஆம் மாதத்தில் நிகழப்பெற்ற பிறப்பு மற்றும் இறப்பு பதிவுகள் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| மாதம் | பிறப்பு | | | இறப்பு | | | இறந்து பிறந்தவை | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் | ஆண் | பெண் | மொத்தம் |
| ஏப்ரல் | 3 | 2 | 5 | 7 | 7 | 14 | 0 | 0 | 0 |

**பொருள் எண் . 463 (2)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டு வந்த காலத்தில் பல்வகை இனங்கள் அரசு ஆணைப்படி 3 வருட குத்தகை இனங்களுக்கு 5 சதவீதம் உயர்வு செய்து ஏல வாடகை தொகை வசூல் செய்யப்பட்டு வந்தது. தற்போது நகராட்சியாக தரம் உயர்ந்ததின் காரணமாக நகராட்சிகளின் சட்ட விதிகளின் படி 3 ஆண்டுகளுக்கு ஒரு முறை அதாவது ஒவ்வொரு 3 ஆண்டிற்கு ஒருமுறை ஏலத்தொகையில் 15 சதவீதம் உயர்வு செய்யப்பட்டு வசூல் செய்யப்பட்டு வருகின்றது. என்ற விபரம் மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் பார்வையிடலாம் (கோ.எண்.15/2023/அ1)

**பொருள் எண்.464 (3)**

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளுக்கும் பொதுசுகாதாரப் பணிகளை மேற்கொள்ள 2023–2024 ஆம் ஆண்டிற்கான பிளீச்சிங் பவுடர்(குடிநீர்), பிளீச்சிங் பவுடர்(பொது சுகாதாரம்) சுண்ணாம்புத்தூள் கருப்பு பினாயில், போக்கிங் கேஸ் (Fogging Gas) Hydrochloric Acid லைசால் மற்றும் தளவாட சாமான்கள் கொள்முதல் செய்வதற்கு மன்றத்தீர்மான எண்.384(21) நாள்.24.03.2023–ன் படி ஒப்பந்தப்புள்ளி இவ்வலுவலக ந.க.எண்.10/2023/அ1 நாள்.24.03.2023–ன் படி கோரப்பட்டதில் 30.03.2023 ஆம் தேதியில்

வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள **ஸ்ரீ விநாயகா டிரேடர்ஸ், கொமாரபாளையம், நாமக்கல் என்ற நிறுவனத்திற்கு** பொது சுகாதார பொருட்கள் கொள்முதல் செய்து கொள்ள நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.10/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.465 (4)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் 1545 தெருவிளக்குகள் உள்ளன. மேற்கண்ட தெருவிளக்குகள், கோடை காலம் மற்றும் மழை காலத்தினால் பழுதடையும் போது அதற்கு தேவையான உபகரணங்கள் கொள்முதல் செய்திடவும் மேற்படி பொருட்கள் தற்சமயம் ஏதும் இருப்பில் இல்லாததால், 2023–2024 (01.04.2023 முதல் 31.03.2024) ஆம் ஆண்டிற்கு தேவைக்கு ஏற்ப தெருமின்விளக்கு உபகரணங்களை மன்றத்தீர்மான எண்.385(22) நாள்.24.03.2023–ன் படி கொள்முதல் செய்திட இவ்வலுவலக ந.க.எண்.09/2023/அ1 நாள்.24.03.2023–ன் படி ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 30.03.2023 ஆம் தேதியில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள **ஸ்ரீராம் எலக்ட்ரிக்கல்ஸ் அண்டு ஏஜென்ஸீஸ்**, ஸ்டேடியம் ரோடு, சேலம்–7 **என்ற நிறுவனத்திற்கு** தெருமின்விளக்கு உபகரணங்கள் கொள்முதல் செய்து கொள்ள நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.09 /2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண். 466 (5)

சேலம் மாவட்டம் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளிலும் மொத்தம் 108 இடங்களில் அமைக்கப்பட்டுள்ள ஆழ்துளைக்கிணறுகளில் 2HP, 3HP, 5HP மின் மோட்டார்கள் பொருத்தப்பட்டு பயன்பாட்டில் உள்ளது. மழைக்காலத்தில் அடிக்கடி மின்வெட்டு மற்றும் இடி, மின்னல், காற்று காரணமாகவும், மேலும் பொதுமக்கள் பயன்பாட்டின் போதும் மேற்படி மின்மோட்டார்கள் அடிக்கடி பழுது ஏற்பட்டு பொதுமக்கள் குடிநீருக்காக அவதிப்படுகிறார்கள். ஆகவே அவசர அவசியத்தின் பொருட்டு பொதுமக்களுக்கு சீரான குடிநீர் விநியோகம் செய்ய வேண்டியுள்ளதால், அதற்கு தேவையான மின் மோட்டார்களின் பழுதான பாகங்களை மாற்றி, பழுதுநீக்கம் செய்வதற்கு, 2023–2024 ஆம் ஆண்டிற்கு மன்றத்தீர்மான எண்.386(23)

நாள்.24.03.2023—ன் படி ஒப்பந்தப்புள்ளி இவ்வலுவலக ந.க.எண்.11/2023/அ1 நாள்.24.03.2023—ன் படி கோரப்பட்டதில் 30.03.2023 ஆம் தேதியில் வரப்பெற்ற விலைப்புள்ளிகளில் குறைந்த ஒப்பந்தபுள்ளி கொடுத்துள்ள **ஸ்ரீ பாலாஜி இன்ஜினியரிங் அண்ட் எலக்ட்ரிக்கல்ஸ் ஒர்க்ஸ், சங்கர் நகர், சேலம் என்ற நிறுவனத்திற்கு** பழுதடைந்துள்ள மின்மோட்டார் இதர உபகரணங்கள் மாற்றி புதிய மின்மோட்டார் வாங்குவதற்கும் கொள்முதல் செய்து கொள்ள நகர் மன்றத்தலைவரின் முன்அனுமதி பெற்று உத்தரவு வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.11/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.467 (6)

தாரமங்கலம் நகராட்சியில் அலுவலக கணினியை இயக்கி வந்த திருமதி.செ.கார்த்திகா என்பவர் 30.04.2023 ஆம் தேதி முதல் பணிக்கு வரவில்லை. இவ்வலுவலகத்திற்கு தட்டச்சர் பணியிடம் நிரப்பப்படும் வரை அலுவலக கோப்புகள் தங்கு தடையின்றி அனுப்புவதற்கும் செயல்படுத்துவதற்கும் அலுவலக பயன்பாட்டிற்காக கணினி தெரிந்த ஒரு நபரை 01.06.2023 ஆம் தேதி முதல் சேலம் மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்ணயம் செய்துள்ள ஊதிய விகிதப்படி பணியாளரை பணி நியமனம் செய்திட மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம்.(கோ.எண்.83/2022/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியிலிருந்து வழங்கலாம்.

பொருள் எண்.468 (7)

தாரமங்கலம் நகராட்சியில் உள்ள 27 வார்டுகளுக்கும் 40 தள்ளுவண்டிகள் மக்கும் குப்பை மற்றும் மக்காத குப்பை என தரம் பிரித்து வாங்கப்படுகிறது. 40 தள்ளுவண்டிகளில் ஏற்கனவே 18 வண்டிகள் பழுதுநீக்கம் செய்யப்பட்டுள்ளது. மீதமுள்ள வண்டியில் தற்போது 4 தள்ளுவண்டிகள் பழுதடைந்து உள்ளதால் 1 தள்ளுவண்டிக்கு ரூ.8000/— வீதம் 4 தள்ளுவண்டிக்கு ரூ.32000/— பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.371/2023/அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.469 (8)

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் கட்டடம் கட்ட அனுமதி கோரி வரும் கட்டட விண்ணப்பங்களை தமிழ்நாடு மாவட்ட நகராட்சி கட்டட விதிகளின் படி பரிசீலனை செய்யப்பட்டும், தமிழகஅரசாணை (நிலை) எண்.18 நகராட்சி நிருவாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை (எம்.ஏ1) நாள்.04.02.2019–இல் தமிழ்நாடு அரசிதழ் எண்.43 பகுதி III பிரிவு 1(a) நாள்.04.02.2019 இல் பிரதானப்படுத்தப்பட்டுள்ள தமிழ்நாடு ஒருங்கிணைந்த கட்டட விதிகள் 2019–இன் படி உள்ளாட்சிகளில் திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி வழங்கப்படும் நடைமுறைகளை கடைபிடிக்குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி இனி வருங்காலங்களில் தமிழ்நாடு ஒருங்கிணைந்த அபிவிருத்தி மற்றும் கட்டட விதிகள் 2019, பிரிவு 14–இன்படி திட்ட அனுமதி மற்றும் கட்டட அனுமதி காலம் 5 ஆண்டுகள் மற்றும் ஒரு முறை கால நீட்டிப்பு காலம் 3 ஆண்டுகள் வழங்க வழிவகை செய்யப்பட்டுள்ளதால், அனுமதிக்காலத்தினை 5 ஆண்டுகளுக்கு வழங்கவும், ஒரு முறை கால நீட்டிப்பு காலத்தினை 3 ஆண்டுகளுக்கு வழங்கவும், புதியகால அவகாசத்திற்கேற்ப அனுமதி கட்டணங்களின் விகிதத்தினை கீழ்க்கண்ட அட்டவணையில் கண்டுள்ளவாறு மாற்றி அமைத்து 10/2020 மாதத்தில் தனி அலுவலர்/பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் அவர்களால் மன்றத்தீர்மானம் நிறைவேற்றப்பட்டு 01/2021 முதல் கீழ்காணும் அட்டவணையில் உள்ள கட்டணங்கள் வசூலிக்கப்பட்டு வருகிறது. இதனை நகராட்சிகளில் சட்டவிதிகளுக்கு ஏற்ப முறைப்படுத்திடவும் மற்றும் அரசிதழில் வெளியிடவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

| வ. எண் | கட்டணம் எந்த உபயோகத்திற்கு என்பது | த.மா.ந. சட்டம் 1920 பிரிவு எண். | அலகு | காலம் | கட்டணம் ரூ. |
|---|---|---|---|---|---|
| 1)அ | விண்ணப்ப பதிவு கட்டணம் | 197A | ஒன்றுக்கு | ஒரு முறை மட்டும் | 500/– |
| ஆ | ஆய்வு கட்டணம் | – | ஒரு தளத்திற்கு | ,, | 1000/– |
| 2) | மனைப்பிரிவு மற்றும் தெரு ஒப்புதல் | | | | |
| அ) | மனைப்பிரிவு மற்றும் தெரு அமைத்தல் அனுமதி | 175, 176 | 1000 சதுரமீட்டர் பரப்பு அல்லது அதன் பாகம் | ஒரு முறை மட்டும் | 1500/– |
| ஆ) | தெரு / பாதை அமைத்தலுக்கான அனுமதி | 176 | 100 மீட்டர் நீளம் அல்லது அதன் பாகம் | ,, | 1000/– |
| இ) | கட்டட அனுமதிக்கு முன்பாக மனை ஒப்புதல் | | | | |
| | i) குடியிருப்பு மற்றும் விவசாய உபயோகம் | 197, 198, 200 | 100 சதுரமீட்டர் பரப்பு அல்லது அதன் பாகம் | ,, | 150/– |
| | ii) வணிக மற்றும் தொழில் உபயோகம் | 197, 198, 200 | ,, | ,, | 250/– |
| | iii) இதர உபயோகம் | 197, 198, 200 | ,, | ,, | 200/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 3) | **கட்டட அனுமதி (RCC Roof Building)** | | | | |
| அ) | குடியிருப்பு மற்றும் விவசாய உபயோகம் | 197, 201 | 1 சதுரமீட்டர் பரப்புஅல்லது அதன் பாகம் | ஐந்தாண்டு களுக்கு | 150/– |
| ஆ) | வியாபார உபயோகம் மற்றும் தொழிலக உபயோகம் | 197, 201 | ,, | ,, | 250/– |
| இ) | இதர உபயோகம் | 197, 201 | ,, | ,, | 200/– |
| 4) | **கட்டட அனுமதி (Roof - Tiled, AC Sheet, Steel Sheet Building)** | | | | |
| அ) | குடியிருப்பு மற்றும் விவசாய உபயோகம் | 197, 201 | 1 சதுரமீட்டர் பரப்புஅல்லது அதன் பாகம் | ஐந்தாண்டு களுக்கு | 100/– |
| ஆ) | வியாபார உபயோகம் மற்றும் தொழிலக உபயோகம் | 197, 201 | ,, | ,, | 200/– |
| இ) | இதரஉபயோகம் | 197, 201 | ,, | ,, | 125/– |
| 5) | சுற்றுச்சுவர் கட்டுதல் | 197, 201 | 10 மீட்டர் நீளம் அல்லதுஅதன் பாகம் | ,, | 100/– |
| 6) | நச்சுத்தொட்டி (Septic Tank) உறிஞ்சுகுழி (Soak Pit) ஊறுகுழிஅமைத்தல் | 197 | ஒருஇனம் | ஒருமுறை மட்டும் | 50/– |
| 7) | திறந்தவெளிக்கிணறு / ஆழ்துளைக்கிணறுஅமைத்தல் | 197 | ஒருஇனம் | ஒருமுறை மட்டும் | 5000/– |
| 8) | தனியாக மேல்நிலைநீர் தேக்க தொட்டிகள் கட்டுதல் | 197 | ஒன்றுக்கு | ,, | 500/– |
| 9) | தனியாக கட்டப்படும் குளியலறை மற்றும் கழிப்பிடம் | 197 | 10 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ,, | 200/– |
| 10) | கட்டடம் கட்டுவதால்/ மாற்றுவதால் அல்லது இடிப்பதால், பழுது பார்ப்பதால் கட்டுமானப் பொருட்களை சேர்த்து வைப்பதால் தெரு அல்லது நடைபாதையில் ஏற்படும் தடங்கல் அல்லது இடையூறுகள் | 188 | 10 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ,, | 250/– |
| 11) | **குடிசைமற்றும் கொட்டகைகட்டுவதற்கான அனுமதி** | 208, 210 | 10 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ஐந்தாண்டு களுக்கு | 100/– |
| 12) | **மராமத்துப் பணி** | | | | |
| அ) | காரைத்தளம் (RCC Roof) அல்லதுமதராஸ் காரைத்தளம் (Madras Terraced Buildings) | 215 | ஒருஇனம் | ஒரு ஆண்டு | 1500/– |
| ஆ) | ஒட்டு வில்லை மற்றும் கல் நார் சிமெண்ட் அட்டைமற்றும் தகரம் வேய்ந்த கூரைக்கட்டிடம் | 215 | ,, | ,, | 1000/– |
| இ) | குடிசை வீடு (ஓலைமற்றும் புல்லினால்வேயப்பட்ட கூரை வீடு) | 215 | ,, | ,, | 50/– |
| 13) | வரைகடப்புகள் | | | | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ) | தெரு வடிகால், தாங்கு சுவர் உள்ளடக்கி தனிப்பட்ட வளாகத்திற்கு செல்ல ஏதுவாக அத்தியாவசியப் படி வடிகால் மூடி மற்றும் சிறுபாலம் அமைத்தல். | 143, 183(1) | (1 மீட்டர் அகலத்திற்குக ட்டணமில்லை) 1 மீட்டருக்கு மேல்ஒருமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ஒரு ஆண்டு | 250/– |
| ஆ) | முதல் தளத்தில் பிதுக்கல் (முகப்பு மாடம்), வெயில் மறைப்பு, திண்ணை, சாய்மானம், கற்பலகை, தாழ்வாரம் மழைமறைப்புபோன்றவை. | 183(1) | ஒருசதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ,, | 250/– |
| இ) | பொது தெரு மற்றும் பொது இடங்களில் தற்காலிக கடை, பந்தல் மற்றும் கொட்டகை முதலியவை அமைக்க தற்காலிக அனுமதி வழங்கல் | 183(2) | ,, | ,, | 250/– |
| ஈ) | பொது தெரு மற்றும் பொது இடங்களில் வணிக பயன்பாடு, கேளிக்கை மற்றும் திருமணம் | 183(2) | 1 சதுரமீட்டர் | ஒருமாதம் /அதன் பாகம் | 100/– |
| உ) | கோடை கால பந்தல் | 183(2) | 10 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | மார்ச் முதல் ஜூன் வரையில் | 250/– |
| ஊ) | திருவிழா மற்றும் இறப்பு சம்மந்தமான காரிய பந்தல் | 183(2) | – | – | கட்டணமி ல்லை |
| எ) | தெருவில் பந்தல் போட தரையில் குழி தோண்டுதல் (தார் சாலை/ சிமெண்ட் சாலை) | 186(1) | ஒருகுழிக்கு | ஒருநிகழ்ச்சி க்கு | 200/– |
| 14) | பேரூராட்சி மூலம் தொடரப்பட்ட வழக்கு திரும்பபெற (Compounding fees) | 351 | ஒருவழக்கு | ஒருநிதியா ண்டுஅல்ல துஅதன் பாகம் | 2000/– |
| 15) | அனுமதியை புதுப்பிக்க (Renewal of license) | 204 | ஒருமுறை | மூன்று வருடம் | 100 அனுமதிக ட்டணம் |
| 16) | அனுமதியில்லாமல் கட்டப்படும் கட்டடங்கள் / இயந்திர நிறுவன கட்டடங்கள் | 197, 200, 201, 207, 208, 215, 217 | ஒருமுறை | ஒருமுறை | 110 அனுமதிக ட்டணம் |
| 17) | வரைகடப்புகளை பேரூராட்சி அலுவலர்களால் அப்புறப்படுத்திய பொருளை மீண்டும் திருப்பி கொடுக்க | 351 | ஒருமுறை | ஒருமுறை | 500/– |
| 18) | அங்கீகரிக்கப்பட்ட வரைபட நகல் ஒன்றிற்கு | – | ஒருஇனம் | ஒருநகல் | 500/– |
| 19) | நகரமைப்பு பிரிவு அபிவிருத்தி திட்டம் வரைபட நகல் ஒன்றிற்கு | – | ,, | ,, | 500/– |
| 20) | நன்னிலை வரி | – | ஒருமுறை | ஒருமுறை | 300/– |
| 21) | படிக்கட்டு கட்டணம் | – | ஒருமுறை | ஒருமுறை | 500/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| 22) | அபிவிருத்தி கட்டணம் | | | | |
| அ) | குடியிருப்பு மனைக்கு அபிவிருத்தி கட்டணம் | 49டி இ என்.டி மற்றும் சி.பி ஆக்ட் 1971 | 1 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ஒருமுறை | 10/– |
| ஆ) | குடியிருப்பு அல்லாத மற்ற அனைத்து கட்டிடத்திற்கும் | 49டி இ என்.டி மற்றும் சி.பி ஆக்ட் 1971 | 1 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ஒருமுறை | 15/– |
| இ) | குடியிருப்பு கட்டிடங்களுக்கும் அபிவிருத்தி அனுமதி வழங்க | 49டி இ என்.டி மற்றும் சி.பி ஆக்ட் 1971 | 1 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ஒருமுறை | 25/– |
| ஈ) | குடியிருப்பு அல்லாத கட்டிடங்களுக்கும் அபிவிருத்தி அனுமதி வழங்க | 49டி இ என்.டி மற்றும் சி.பி ஆக்ட் 1971 | 1 சதுரமீட்டர் அல்லதுஅதன் பாகம் | ஒருமுறை | 30/– |
| <u>23)</u> | <u>உரிமம் பெற்றகட்டட அளவர் நியமனம்</u> | | | | |
| | உரிமக் கட்டணம் | 23 | ஒருமுறை | ஐந்து நிதியாண்டு | 5000/– |
| 24) | சிறு தொழில் காரியங்களுக்காக ஆயில் இஞ்சின் நீராவி அல்லது மின்சாரம் மூலம் இயந்திரங்களை உபயோகப்படுத்துவது மின்சார விசையினால் இயக்கப்படுபவை அல்லது மின்சார விசையினாலன்றி மற்ற வகையில் ஓட்டப்படும் இயந்திரங்கள். | | | | |
| அ) | மின்சார விசையினால் ஓடும் இயந்திரங்கள் | | | | |
| | 1) 1 குதிரைதிறன் முதல் 10 குதிரை திறன் வரை | 250 | ஒன்று / பலஇயந்திரம் சேர்த்து | ஒரு நிதியாண்டு | 500/– |
| | 2) 11 குதிரைதிறன் முதல் 20 குதிரை திறன் வரை | 250 | ,, | ,, | 1000/– |
| | 3) 21 குதிரைதிறன் முதல் 50 குதிரை திறன் வரை | 250 | ,, | ,, | 2000/– |
| | 4) 51 குதிரைதிறன் முதல் 100 குதிரை திறன் வரை | 250 | ,, | ,, | 4000/– |
| | 5) 101 குதிரைதிறன் முதல் 200 குதிரை திறன் வரை | 250 | ,, | ,, | 6000/– |
| | 6) 200 குதிரை திறன் வேகத்திற்கு மேல் ஒவ்வொரு குதிரை திறனுக்கும் (கூடுதலாக) | 250 | ,, | ,, | 100/– |
| | 7) வெல்டிங் மற்றும் கியாஸ் இன்ஜின் | 250 | ,, | ,, | 1000/– |
| ஆ) | எந்த ஒரு தொழில் அல்லது தயாரிப்பிற்கு தேவையான இயந்திரம் நிறுவ அனுமதி. | | | | |
| | 1) நெல் அறைக்கும் இயந்திரம் | 250 | ஒன்று / பலஇயந்திரம் சேர்த்து | ஒரு நிதியாண்டு | 500/– |
| | 2) மாவு / பொடிகள்அறைக்கும் இயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 3) பிண்டோ செக்கு அல்லது ரோட்டரி இயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 4) கடலை உடைக்கும் இயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 5) டிசைன்டிகேடர் | 250 | ,, | ,, | 500/– |
| | 6) ஐஸ் தயாரிப்பு அல்லது குளிர் சாதனப்பெட்டி | 250 | ,, | ,, | 500/– |
| | 7) மரம் அறுக்கும் இயந்திரம் | 250 | ,, | ,, | 1000/– |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | 8) கிழங்கு அரைப்பு அல்லது உரிப்பு | 250 | ,, | ,, | 1200/– |
| | 9) பாலிஷர் | 250 | ,, | ,, | 500/– |
| | 10) கரும்புபிழியும் இயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 11) லேத் பிளாண்ட் | 250 | ,, | ,, | 500/– |
| | 12) அச்சடிக்கும் இயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 13) சாணைஇயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 14) வெல்டிங் இயந்திரம் | 250 | ,, | ,, | 500/– |
| | 15) ஆயில் எக்ஸ்பெல்லர் | 250 | ,, | ,, | 500/– |
| | 16) கைத்தொழில் – விசை சக்தியால் இயக்கப்படும் எந்த அளவு குதிரை திறன் இயந்திரத்திற்கும் | 250 | ,, | ,, | 500/– |
| 25) | பொதுவாக தொழிற்சாலை முறையில் எந்தபொருளும் தயார் செய்வதன் காரணமாக மனித வாழ்க்கைக்கு அபாயமும், சுகாதாரத்திற்கு கேடும் அல்லது சொத்துக்களுக்கு சேதமும் உண்டாக்கக்கூடிய தொழில் இடங்களுக்கு. | 250 | ஒன்று | ஒரு நிதியாண்டு | 1000/– |
| 26) | **<u>சொத்துவரி, குடிநீர் இணைப்புகள் பெயர் மாற்ற கட்டணம்</u>** | | | | |
| அ | குடியிருப்பு மற்றும் விவசாய உபயோகம் | 81 | ஒரு வரிவிதிப்பிற்கு | ஒருமுறை | 1000/– |
| ஆ | வியாபார உபயோகம் மற்றும் தொழிலக உபயோகம் | 81 | ஒரு வரிவிதிப்பிற்கு | ஒருமுறை | 2000/– |
| இ | இதர உபயோகம் | 81 | ஒரு வரிவிதிப்பிற்கு | ஒருமுறை | 1000/– |
| 25) | மழைநீர் சேகரிப்பு தொட்டி அமைத்தல் (வட்டியின்றி திருப்பப்படும் தொகை) | 215A | ஒன்றுக்கு | ஒருமுறை | 5000/– |

எனவே, மேற்கண்டவாறு கட்டணத்தை 01.01.2021 ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூல் செய்யப்பட்டுள்ளதை அங்கீகரித்தும், சேலம் மாவட்ட அரசிதழில் வெளியீடு செய்து நடவடிக்கை மேற்கொள்ளவும் மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.15/2023 /அ1)

**பொருள் எண்.470 (9)**

தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான நங்கவள்ளி மெயின்ரோட்டின் ஓரமாக அமைந்துள்ள ஜே.வி.வி.டி. கடை எண்.1–க்கு 2023–2024 ஆம் ஆண்டு ஏலம் விடப்பட்டதில் திரு.சி.சேகர் என்பவர் மாதாந்திர வாடகை அடிப்படையில் அதிகபட்ச ஏலத்தொகையாக ரூ.7300/– க்கு 30.03.2023 ஆம் தேதியில் ஏலம் எடுத்துள்ளார். தற்போது இக்கடையின் தரைதளம் மற்றும் மேற்கூரை பழுதடைந்திருந்ததால் அதனை சரி செய்ய 01.04.2023 முதல் 31.05.2023 வரை கடை

வாடகையினை வசூல் செய்வதிலிருந்து விலக்களித்தும், மாதாந்திர வாடகை தொகை கேட்பு **01.06.2023** ஆம் தேதி முதல் நிர்ணயம் செய்து வசூல் செய்ய மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 14/2023 /அ1)

**பொருள் எண்.471 (10)**

தாரமங்கலம் நகராட்சி பேரூராட்சியாக செயல்பட்டிருந்த காலத்தில் பேரூராட்சி எல்லைக்குட்பட்ட பேரூராட்சிக்கு சொந்தமான மின் இணைப்புகளான மின்மோட்டார், கட்டிடங்கள், தெருமின்விளக்கு ஆகியவற்றின் மின் இணைப்புகள் செயல் அலுவலர் பெயரில் நாளது வரை உள்ளது. தற்போது தாரமங்கலம் நகராட்சியாக தரம் உயர்ந்து செயல்பட்டிருப்பதால் மின் இணைப்புகளில் உள்ள செயல் அலுவலர் பெயரை நீக்கி தற்போது தாரமங்கலம் ஆணையாளர் என பெயர் மாற்றம் (இணையதளம் வழியாக) செய்திட வேண்டி ஒரு மின்இணைப்பிற்கு சுமார் ரூ.950/– ஆகின்றது. எனவே தாரமங்கலம் நகராட்சிக்கு சொந்தமான மொத்த மின்இணைப்புகள் சுமார் 450–க்கு பெயர் மாற்றம் செய்திட ரூ.427500/– ஆகும் தொகையினை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.09/2023 /அ1)
2. செலவினத்தினை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.472 (11)**

தாரமங்கலம் நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு 2020–2021 ஆம் ஆண்டு (Un Tied Grant) திட்டத்தின் கீழ் தாரமங்கலம் பேரூராட்சியாக செயல்பட்டிருந்த போது வழங்கப்பட்ட மானியத்தொகையினை தற்போது நகராட்சிக்கு தேவையான மழைநீர் வடிகால், திட்டப்பணிகள் (Un Tied Grant) ரூ.30.65 இலட்சம் மதிப்பீட்டிலும் (Tied Grant) ரூ.8.19 இலட்சம் மதிப்பீட்டில் வ.எண்.1 மற்றும் 2–ல் கண்டுள்ள பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.518/2023/அ1 நாள்.27.04.2023–ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சேலம் அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| Sl. No | Name of the work (Untied) | Amount |
|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சியில் கருக்குப்பட்டி சாலையில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி. Providing Storm water Drain at Karukkupatti road (UNICODE: 189001S001) in Tharamangalam Municipality. | 4.35 |

| | | |
|---|---|---|
| 2 | தாரமங்கலம் நகராட்சியில் ஆதிதிராவிடர் தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி.<br>Providing Storm water Drain at Adidravidar Street (UNICODE: 189022S171) in Tharamangalam Municipality. | 9.50 |
| 3 | தாரமங்கலம் நகராட்சியில் பிள்ளையார் கோவில், 2வது தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி.<br>Providing Storm water Drain with Culvert at Pillayar Kovil 2nd street 0-30m (UNICODE: 189006S088) in Tharamangalam Municipality. | 1.90 |
| 4 | தாரமங்கலம் நகராட்சியில் வாத்தியார் தோட்டம் முதல் தெருவில் மழைநீர் வடிகால் மற்றும் சிறுபாலம் அமைத்தல் பணி.<br>Providing Storm water Drain and Culvert at Vathiyar Thottam 1st Street 0-50m (UNICODE: 189018R131) in Tharamangalam Municipality. | 2.00 |
| 5 | தாரமங்கலம் நகராட்சியில் மெத்த கடை சந்து தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி.<br>Providing Storm water Drain at Metha kada Sandhu (UNICODE: 189021R146) in Tharamangalam Municipality. | 1.65 |
| 6 | தாரமங்கலம் நகராட்சியில் சுப்ரமணிய சுவாமி கோவில் 2வது தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி.<br>Providing Storm water Drain at Subramanya Swamy Temple Street 2 (UNICODE: 189023S174) in Tharamangalam Municipality. | 5.00 |
| 7 | தாரமங்கலம் நகராட்சியில் சுப்ரமணிய சுவாமி கோவில் 4வது தெருவில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி.<br>Providing Drain at (0-25) Subramany Swamy Temple Steet - 4 (UNICODE: 189023S176) in Tharamangalam Municipality. | 1.05 |
| 8 | தாரமங்கலம் நகராட்சியில் கிழக்கு பாவடி OHT சாலை அருகில் மழைநீர் வடிகால் அமைத்தல் பணி.<br>Providing Storm water Drain at Kilakku pavadi OHT Road (UNICODE: 189020R181) in Tharamangalam Municipality. | 5.20 |
| | **TOTAL** | **30.65** |

| Sl. No | Name of the work (tied) | Amount |
|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சி 26வது வார்டு கீழ் சின்னாகவுண்டம்பட்டியில் நுண் உரம் கூடம் அருகில் கான்கீரிட் தளம் அமைத்தல் பணி.<br>Providing Platform for Drying the Waste Near MCC Centre at Ward No.26 Keel Chinnagoundampatty in Tharamangalam Municipality. | 3.20 |
| 2 | தாரமங்கலம் நகராட்சி 8வது வார்டில் அமைந்துள்ள அரிய புத்திரன் பூங்கா மேம்பாடு பணி செய்தல்.<br>Improvement of Park Development (Well Cover, Cement Statue,Greenaries,1 HP Pumps, Art work in compound wall) at Ward No:8 Ariyaputhiran Park SF No:144/2A1 In Tharamangalam Municipality | 4.99 |
| | **TOTAL** | **8.19** |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பார்வையிடலாம். (கோ.எண்.518/2023/அ1)

பொருள் எண்.473 (12)

தாரமங்கலம் நகராட்சி 15வது மத்திய நிதிக்குழு 2022–2023 ஆம் ஆண்டு (Tied Grant) திட்டத்தின் கீழ் தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட கீழ்சின்னாகவுண்டம்பட்டி மயானம் பகுதியில் ஆழ்துளைகிணறு அமைத்தல் பணிக்கு ரூ.2.69 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.613/2023/அ1 நாள்.03.05.2023–ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சென்னை–28 அவர்களுக்கு முன்மொழிவு அனுப்பப்பட்டது. சென்னை நகராட்சி நிர்வாகம் அவர்களின் செயல்முறை கடிதம் ந.க.எண்.16600/2022/சிஎப்சி–1 நாள்.17.05.2023–ன் படி நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது. இதனைத்தொடர்ந்து ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டது. மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பார்வையிடலாம். (கோ.எண். 613/2022 /அ1)

பொருள் எண்.474 (13)

தாரமங்கலம் நகராட்சி நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் NSMT 2023–2024 ஆம் ஆண்டு பழுதடைந்த நிலையில் உள்ள தார்சாலைகள் மற்றும் சிமெண்ட் சாலைகளை சீரமைத்தல் பணிக்கு ரூ.214.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.598/2023/அ1 நாள்.17.05.2023–ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சென்னை–28 அவர்களுக்கு திட்ட பிரேரனை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| S.no | Name of the Road | Division Number | Length in M | width in M | Proposed Cost (Rs.in Lakhs) |
|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | 5 | 6 |
| | **Package-I** | | | | |
| | **Improvements Work in BT surface** | | | | |
| 1 | ஓமலூர் தெரு 2<br>Omalur Street 2 | (189008R048) | 148.00 | 4.20 | 140.00 |
| 2 | மாரியம்மன் கோவில் 4<br>Mariyamman Kovil 4th | (189009R072) | 116.11 | 4.00 | |
| 3 | புத்து மாரியம்மன் கோவில் குறுக்கு சாலை<br>1 Puthu Mariyamman Kovil Cross Road 1 | (189009R175) | 44.00 | 5.00 | |
| 4 | புத்து மாரியம்மன் கோவில் மெயின் ரோடு<br>Puthu Mariyamman Kovil Main Road | (189009R174) | 83.00 | 6.80 | |
| 5 | மல்லிகை 3வது தெரு<br>Malligai 3 rd street | (189018R135) | 127.00 | 4.40 | |
| 6 | சங்ககிரி தெரு 2 | (189022R086) | 61.00 | 4.20 | |

| | | | | | |
|---|---|---|---|---|---|
| | Sankari Street 2 | | | | |
| 7 | சங்ககிரி குறுக்கு தெரு 3<br>Sankari Street Cross 3 | (189022R088) | 119.00 | 4.20 | |
| 8 | மேல் சின்னாகவுண்டம்பட்டி மெயின் ரோடு<br>Mel Chinnagoundampatty Main Road | (189025R159) | 1320.00 | 5.00 | |
| 9 | உரக்கிடங்கு ரோடு<br>Urakedangu Road | (189026R168) | 350.00 | 4.00 | |
| 10 | முனிய கவுண்டன் வளவு ரோடு<br>Muniya Goundan valavu Road | (189015S161) | 660.00 | 3.99 | |
| | **Package-II** | | | | |
| | **Improvements Work in BT surface** | | | | |
| 1 | வேடப்பட்டி ரோடு<br>Vedapatti Road | (189004R024) | 116.00 | 4.00 | |
| 2 | அருணாச்சலம் ரோடு 1<br>Arunachalam Road RD1 | (189004R025) | 165.00 | 4.00 | |
| 3 | தாரமங்கலம் சார்பதிவாளர் அலுவலகம் 2வது குறுக்கு தெரு 4<br>Tharamangalam Registration Office Street 4 Cross 2 | (189004R004) | 108.00 | 4.00 | |
| 4 | அருணாச்சலம் ரோடு 2<br>Arunachalam RD 2 | (189004R026) | 152.00 | 4.00 | 35.00 |
| 5 | அருணாச்சலம் 1வது குறுக்கு தெரு<br>Arunachalam RD 1 Cross | (189004R027) | 23.00 | 4.00 | |
| 6 | மாரியம்மன் கோவில் 2வது தெரு<br>Mariyamman Kovil 2 st | (189004R069) | 73.88 | 4.00 | |
| 7 | மாரியம்மன் கோவில் 1வது தெரு<br>Mariyamman Kovil 1 st | (189004R068) | 71.67 | 4.00 | |
| 8 | சன்னதி தெரு<br>Sannathi Street | (189012R092) | 290.00 | 4.00 | |
| | **Package-III** | | | | |
| | **Improvements Work in Cement Concrete surface** | | | | |
| 1 | வாத்தியார் தோட்டம் 7வது தெரு<br>Vathiyar Thottam 7th Street | (189018R132) | 266.87 | 6.60 | |
| 2 | சங்ககிரி தெரு 1<br>Sankakiri Street 1 | (189022R085) | 79.00 | 6.50 | 39.00 |
| 3 | சங்ககிரி தெரு 3<br>Sankakiri Street 3 | (189022R087) | 107.00 | 4.50 | |
| 4 | எமராஜன் வளவு<br>Yemarajan Street | (189026R167) | 330.00 | 4.00 | |
| | | | | **TOTAL** | **214.00** |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பார்வையிடலாம். (கோ.எண். 598/2023 /அ1)

பொருள் எண்.475 (14)

தாரமங்கலம் நகராட்சி கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023–2024 ஆம் ஆண்டு மண்சாலைகளை தார்சாலைகளாக மாற்றுதல் பணிக்கு ரூ.206.00 இலட்சம் மதிப்பீட்டில் திட்டப்பணிகள் மேற்கொள்ள இவ்வலுவலக ந.க.எண்.465/2023/அ1 நாள்.25.04.2023–ன் படி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் சென்னை–28 அவர்களுக்கு திட்ட பிரேரனை அனுப்பிவைக்கப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

| S.No | Name of Work | Length in Meter(M) | Estimate Amount (in lakhs) |
|---|---|---|---|
| 1 | ஏ.பி.ஜே.அப்துல்கலாம் தெரு<br>APJ Abdul Kalam Street 03 Unicode (189004R011) | 225.00 | 206.00 |
| 2 | அண்ணா மலை நகர் தெரு<br>Anna malai nagar street 1 Unicode (189004R014) | 191.00 | |
| 3 | மின்சார வரியம் முதல் தெரு<br>Power office Road 1st Street Unicode (189005R029) | 151.73 | |
| 4 | ஓமலூர் குறுக்கு தெரு 1<br>Omalur Street A Cross 1 Unicode (189008R045) | 61.00 | |
| 5 | ஓமலூர் குறுக்கு தெரு 2<br>Omalur Street A Cross 2 Unicode(189008R046) | 76.00 | |
| 6 | ஓமலூர் தெரு 4<br>Omalur Street 4 Unicode (189008R050) | 360.00 | |
| 7 | பங்களா தோட்டம் முதல் தெரு<br>Bangalathottam street 1st street Unicode (189009R067) | 102.34 | |
| 8 | பங்களா தோட்டம் இரண்டாவது தெரு<br>Bangala Thottam 2nd street Unicode (189009R077) | 80.48 | |
| 9 | பங்களா தோட்டம் நாளவது தெரு<br>Bangala Thottam 4th street Unicode (189009R079) | 177.36 | |
| 10 | எம்.ஜி.ஆர். காலனி தெரு 1<br>MGR Colony Street 1 Unicode(189016R121) | 140.00 | |
| 11 | கைலாசநாதர் கார்டன் குறுக்கு தெரு<br>Kailasanathar Garden 1st Cross Unicode(189016R125) | 350.00 | |
| 12 | சமுதாய கூடம் ரோடு<br>samuthaya koodam road 1Unicode (189020R180) | 65.00 | |
| 13 | கிழக்கு பாவடி OHT ரோடு<br>Kilakku pavadi OHT RoadUnicode (189020R181) | 63.00 | |
| 14 | கண்ணனூர் மாரியம்மன் கோவில் தெரு<br>Kannanur Mariamman Kovil Street Unicode (189022R089) | 143.00 | |
| 15 | கண்ணனூர் மாரியம்மன் கோவில் குறுக்கு தெரு<br>Kannanur Mariamman Kovil Street Cross 2 Unicode(189022R148) | 32.00 | |
| 16 | விநாயகர் கோவில் தெரு 1<br>Ganesh Temple Street 1 Unicode (189023R150) | 130.00 | |

| | | | |
|---|---|---|---|
| 17 | முனியப்பன் கோவில் தெரு<br>Muniyappan Kovil Street 1Unicode (189024R095) | 160.00 | |
| 18 | கலைஞர் நகர் தெரு<br>Kalaignar Nagar Street Unicode(189024R153) | 210.00 | |
| 19 | முருகன் கோவில் முதல் தெரு<br>Murugan kovil 1st street Unicode (189024R155) | 120.00 | |
| 20 | முருகன் கோவில் இரண்டாவது தெரு<br>Murugan kovil 2nd street Unicode( 189024R156) | 210.00 | |
| | **Total** | **3047.91** | **206.00** |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பார்வையிடலாம். (கோ.எண். 465/2023 /அ1)

**பொருள் எண்.476 (15)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தையில் அமைந்துள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கதொட்டியிலிருந்து ஜலகண்டாபுரம் ரோடு முதல் தேர்நிலையம் வரை புதியதாக 200 மீட்டர் 6 இன்ச் பம்பிங் மெயின் லைன், கேட்வால்வுகள் பொருத்தி பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் பணி செய்ய இவ்வலுவலக ந.க.எண்.541/2022/அ1 நாள்.26.04.2023 ஆம் தேதியில் ஒப்பந்தப்புள்ளி அறிவிப்பு செய்யப்பட்டதில், அதில் குறைந்த ஒப்பந்தப்புள்ளி கொடுத்துள்ள கீழ்க்கண்ட நிறுவனத்திற்கு 15.05.2023 ஆம் தேதி பணி உத்தரவு வழங்கியதற்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

| வ. எண் | பணியின் விபரம் | மதிப்பீடு (இ) | ஒப்பந்ததாரர் பெயர் | குறைவு / அதிகம் |
|---|---|---|---|---|
| 1 | தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட வாரச்சந்தையில் அமைந்துள்ள 8.00 இலட்சம் லிட்டர் கொள்ளளவு கொண்ட மேல்நிலை நீர்த்தேக்கதொட்டியிலிருந்து ஜலகண்டாபுரம் ரோடு முதல் தேர்நிலையம் வரை புதியதாக 200 மீட்டர் 6 இன்ச் பம்பிங் மெயின் லைன், கேட்வால்வுகள் பொருத்தி பைப்லைன் விஸ்தரிப்பு செய்தல் | 3.50 | திரு. எம்.பழனிசாமி | –0.12 குறைவு |
| | | | திரு.எஸ். மாரியப்பன் | –0.18 அதிகம் |

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 541/2023 /அ1)
2. செலவினத்தை குடிநீர்நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.477 (16)

தமிழக முதலமைச்சர் காலை சிற்றூண்டி வழங்கும் திட்டத்தின் கீழ் அரசு தொடக்கப்பள்ளிகளில் 1 முதல் 5 வகுப்பு வரை பயிலும் தற்போது கணக்கீட்டின் படி 1320 மாணவ மாணவிகளுக்கு காலை உணவு வழங்குவதற்கு ஒப்பந்தபுள்ளி கோரப்பட்டதில் 2 விலைப்புள்ளிகள் வரப்பெற்றன. அதில் குறைந்த விலைப்புள்ளி கொடுத்துள்ள ஸ்ரீ கார்த்திக் இன்டஸ்ரீஸ், சேலம் என்ற நிறுவனத்திற்கு 1 மாணவருக்கு ரூ.12.60/—க்கு தற்போதைய கணக்கீட்டின் படி 1320 மாணவர்களுக்கு காலை சிற்றூண்டி உணவு செய்து தருவதாக வரப்பெற்றதை ஏற்று உத்தரவு வழங்குவதற்கு மன்றத்தின் பார்வைக்கும் அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து செலவிட அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 739/2022 /அ1)
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.478 (17)

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் அவர்களின் காலை உணவு திட்டத்தின் கீழ் 100 மாணவருக்கு 1 பணியாளர் வீதம் 1 முதல் 5 ஆம் வகுப்பு வரை 9 பள்ளிகளில் பயின்று வரும் 1320 மாணவர்களுக்கு மாவட்ட ஆட்சித்தலைவரின் விகிதாசாரப்படி 80 மாணவர்களுக்கு 1 பணியாளர் வீதம் மொத்தம் 1320 மாணவர்களுக்கு 15 பணியாளர்கள் சுயஉதவிக்குழுவிலிருந்து நியமித்திடவும் ஒரு பணியாளருக்கு ரூ.1500/— வீதம் 15 பணியாளர்களுக்கு ஆகும் செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.739/2022 /அ1)
2. செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.479 (18)

துணை இயக்குநர், சுகாதார பணிகள் சேலம் அவர்களின் அலுவலக ந.க.எண்.199/இ5/2020, நாள்.04.05.2022—ன் கடிதத்தில் தற்போது 2023ஆம் வருடம் ஏப்ரல் மாதத்திலிருந்து விட்டு விட்டு மழை பெய்து வருவதாலும் இதனை தொடர்ந்து, தென் மேற்கு பருவமழை ஆரம்பிக்கும் , ஜீன் மாதத்திலிருந்து டெங்கு கொசுப்புழு வளர் நிலைகள் அதிகரித்து டெங்கு காய்ச்சல் அதிகரிக்க வாய்ப்பு உள்ளது. ஆகையால் டெங்கு காய்ச்சல் பரவாமலும், அதிகரிக்காமலும் தடுப்பதற்கு டெங்கு கொசுப்புழு அடர்த்தியை டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணி செய்து குறைக்க 20 டெங்கு மஸ்தூர் பணியாளர்கள் 04/2023 மாதம் பணி செய்தமைக்கு இந்நகராட்சியின்

பொதுநிதியிலிருந்து ஊதியம் வழங்கியதற்கு பின்னேற்பும் 01.05.2023 முதல் 10.05.2023 வரை இப்பணியாளர்கள் பணி செய்யவில்லை என்பதையும், மேலும் மாவட்ட ஆட்சித்தலைவர் ஆய்வுக்கூட்ட அறிவுரையின் படி மீண்டும் மஸ்தூர் பணியாளர்களை 11.05.2023 முதல் 31.07.2023 வரை பணி செய்ய அறிவுறுத்தப்பட்டுள்ளதை மன்றத்தின் பார்வைக்கும் அதற்கான செலவினத்தை பொதுநிதியிலிருந்து மேற்கொள்ள மன்றத்தின் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.07/2023 /அ1)
2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

பொருள் எண்.480 (19)

தாரமங்கலம் நகராட்சிக்கு வருவாய் ஈட்டும் பொருட்டு வாரச்சந்தை பகுதியில் வடக்கு புறமாக உள்ள காலியிடத்தில் 2023—2024 ஆம் ஆண்டின் கீழ் வாரச்சந்தைக்குள் 156 கடைகளும் வெளிபுறம் 14 கடைகள் மற்றும் 2 ஓட்டல்கள் புதியதாக கட்டுவதற்கு இவ்வலுவலக கடித ந.க.எண்.425/2023/அ1 நாள்.12.05.2023 மூலம் திட்டப்பிரேரணை ரூ.360.00 இலட்சம் மதிப்பீட்டில் கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2023—2024—ன் கீழ் ஒதுக்கீடு கோரி அனுப்பப்பட்டுள்ளது. மன்றத்தின் பார்வைக்கும் அனுமதிக்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பார்வையிடலாம். (கோ.எண். 425/2023 /அ1 நாள்.12.05.2023)

பொருள் எண்.481 (20)

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டு பகுதிகளில் 09/2022 முதல் 05/2023 வரை மின்சார கம்பங்களிலுள்ள எரியாத டியூப்லைட், சோடியம், சிஎப்எல், எல்இடி ஆகிய தெருவிளக்குகளை தமிழ்நாடு மின்சார வாரியத்தில் பணிபுரியும் 7 பணியாளர்கள் மூலமாக 1 லைட்டுக்கு ரூ.20/— வீதம் 1 பணியாளர் 150 லைட்டுகள் கம்பம் ஏறி மாற்றி கொடுத்தமைக்கு தொகை ரூ.3000/— வீதம் மொத்தம் 7 நபர்களுக்கு மொத்த தொகை ரூ.21000/—யை இந்நகராட்சியின் பொதுநிதியிலிருந்து வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். /2023 /அ1 நாள்.12.05.2023)
2. செலவினத்தை பொதுநிதியில் மேற்கொள்ளலாம்.

**பொருள் எண்.482 (21)**

தாரமங்கலம் நகராட்சிக்கு உட்பட்ட 7வது வார்டில் அமைந்துள்ள டிராக்டர் ரூம் இரும்பு கதவு பழுது நீக்கம் செய்தல் மற்றும் 5வது வார்டு ஜலகண்டாபுரம் ரோடு ராஜா மெக்கானிக் கடை அருகில் மின்மோட்டார் பழுது நீக்கம் ஆகிய பணிகள் செய்தமைக்கு திரு.பழனிசாமி கான்டிராக்டர் என்பவருக்கு ரூ.23000/—யை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 223/2022 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.483 (22)**

தாரமங்கலம் நகராட்சி தலைமை அலுவலகத்திற்கு அறிக்கை அனுப்பவும் அலுவலக கோப்புகள் தயாரிக்கவும் மற்றும் அலுவலக பணிகள் பயன்பாட்டிற்கு பயன்படுத்தப்படும் கணினிகள் பழுது நீக்கம் மற்றும் மானிடர் சர்வீஸ் செய்து கொடுத்தமைக்கும் லாஜிக் இன்போ டெக் நிறுவனத்திற்கு ரூ.18400/—யை தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 13/2023 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்

**பொருள் எண்.484 (23)**

தாரமங்கலம் நகராட்சி பகுதியில் உள்ள தினசரி சேகரமாகும் குப்பைகளை வார்டு எண்.26 கீழ்சின்னாகவுண்டம்பட்டியில் நுண்ணுயிரி செயலாக்க முறையில் (Bio Mining) குப்பைகள் பிரிக்கப்பட்டு வருவதால் 7வது வார்டு நங்கவள்ளி ரோடு பகுதியில் தற்காலிகமாக சேகாரம் செய்து பிரித்து கையாளப்பட்டு வருகிறது. இக்குப்பைகள் பிரித்து கையாளப்படும் இடத்தில் வெளிநபர்களால் அசம்பாவிதம் ஏதும் ஏற்படுத்துவதை கண்காணிப்பு செய்து காவல்துறை மூலம் நடவடிக்கை எடுக்க 3 சிசிடிவி கேமராக்கள் பொருத்தியமைக்கு தொகை ரூ.19977/—யை JS Enterprises என்ற நிறுவனத்திற்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன்

அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 86/2022 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.485 (24)**

தாரமங்கலம் நகராட்சி திரு.சுந்தரராஜன் என்பவர் குடிநீர் இணைப்பு தொடர்பாக தொடுக்கப்பட்ட வழக்கு எண்.CC16/2022-யை நுகர்வோர் நீதிமன்றத்தில் வாதாடிய திரு.மதன்மோகன் வழக்கறிஞர் என்பவருக்கு ரூ.5000/–யை நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று தொகை வழங்கியமைக்கு பின்னேற்பு பெற மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 116/2022 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.486 (25)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 10வது வார்டு கழிப்பிடம் அருகில் உள்ள சமாதிகள் மற்றும் 13வது வார்டு நல்லகிணறு அருகில் உள்ள சமாதிகளை இடித்து கட்டிட இடிபாடு கழிவுகளை சின்னஏரிக்கரை மயானம் பொத்தியாம்பட்டி மற்றும் கருக்குப்பட்டி ஆகிய இடங்களில் டிராக்டர் வாகனம் மூலம் கொட்டும் பணி செய்தமைக்கு தொகை ரூ.24000/–யை V.Selvakumar, UVS Earth Movers Tractor Works என்ற நிறுவனத்திற்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.04/2022 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.487 (26)**

தாரமங்கலம் நகராட்சி 1வது வார்டு அருந்ததியர் காலனி, 3,6வது வார்டு பனங்காடு சின்ன ஏரிக்கரை மயானம், 5வது வார்டு வெட்னிகரடு கிழக்கு பகுதி, 7வது வார்டு ஏரிக்கரை ரோடு மற்றும் பிள்ளையார் கோவில் வீதி, 9வது வார்டு அருணாச்சலம்புதூர் ஏடிசி டிப்போ மெயின் ரோடு, 12வது வார்டு நங்கவள்ளி மெயின் ரோடு 10,20வது வார்டு கழிப்பிடம் அருகில், 13வது வார்டு நல்லகிணறு அருகில், 26வது வார்டு சங்ககிரி மெயின் ரோடு மயானம் மற்றும் உரப்பூங்கா ஆகிய இடங்களில் உள்ள குப்பை, கல், மண், முள் செடிகள் மற்றும் சாக்கடை ஆகியவற்றை ஜேசிபி வாகனம் மூலம் சுத்தம் செய்தமைக்கு தொகை ரூ.87300/—யை V.Selvakumar, UVS Earth Movers Tractor Works என்ற நிறுவனத்திற்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.04/2022 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.488 (27)**

தாரமங்கலம் நகராட்சியில் திடக்கழிவு மேலாண்மை பணிகளை ஒப்பந்த அடிப்படையில் பணிகளை மேற்கொள்ள ஒப்பந்தபுள்ளி விளம்பர அறிவிப்பு மாநில ஒப்பந்தபுள்ளி செய்திமலர் மாலை முரசு மற்றும் டெக்கான் கிரானிக்கல் ஆகிய நாளிதழ்களில் விளம்பரம் செய்தமைக்கு விளம்பர கட்டண தொகை ரூ.57382/—யை Bright advertising என்ற நிறுவனத்திற்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.06/2023 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

**பொருள் எண்.489 (28)**

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட 1 முதல் 27 வார்டில் உள்ள அனைத்து பொது கழிப்பிடங்களிலும் பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள 15 கதவுகளை மாற்றி விட்டு புதிய பிவிசி 15 கதவுகளாக மாற்றியமைக்கு தொகை ரூ.46875/—யை ஸ்ரீ சிவசக்தி டிம்பர் மார்ட் அன்டு

ஹார்டுவேர்ஸ் என்ற நிறுவனத்திற்கு தாரமங்கலம் நகராட்சியின் நகர் மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியிலிருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வேண்டி மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண். 223/2022 /அ1)
2. மேற்படி செலவினத்தை நகர்மன்ற தலைவரின் முன் அனுமதி பெற்று பொது நிதியில் இருந்து வழங்கியமைக்கு பின்னேற்பு வழங்கலாம்.

பொருள் எண்.490 (29)

தாரமங்கலம் நகராட்சி 2023–2024 ஆம் ஆண்டிற்கான உத்தேச வரவு ரூ.12.14/–கோடி செலவு ரூ.12.40/– கோடி மற்றும் 2022 – 2023 ஆம் ஆண்டிற்கான திருத்திய வரவு ரூ.11.56/– கோடி செலவு ரூ.11.88/– கோடி மதிப்பீடு மன்றத்தின் பார்வைக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

1. மன்றம் பார்வையிடலாம் (கோ.எண்.01/2023/அ1)

பொருள் எண்.491 (30)

தாரமங்கலம் நகராட்சி 1 முதல் 27 வார்டு பகுதிகளிலும் நடைபெறும் திருமண நிகழ்ச்சி சடங்கு சம்பிரதாய நிகழ்ச்சிகள் மற்றும் ஈமகாரியங்களில் குடிநீரின் தேவை மிகவும் அத்தியாவசியமாக உள்ளதால் மேற்காணும் நிகழ்ச்சிகளுக்கு குடிநீர் வேண்டி பொதுமக்கள் இந்நகராட்சியில் மனு அளித்து வருகின்றனர். எனவே மேற்கண்ட நிகழ்ச்சிகளுக்கு மற்றும் காரியங்களுக்கு குடிநீர் மட்டும் 1000 லிட்டர் (வாகனம் நீங்கலாக) ரூ.600/– என்ற விலையில் குடிநீர் இருப்பின் அடிப்படையில் நிபந்தனைகளுக்கு உட்பட்டு பொதுமக்களுக்கு வழங்க மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு :

மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.489/2022/அ1)

பொருள் எண்.492 (31)

தாரமங்கலம் நகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் உள்ள 27 வார்டுகளில் அமைந்துள்ள குடிநீர் விநியோகம் செய்யும் பைப்லைன் ஆனது 20 வருடங்களுக்கு முன்னதாக போடப்பட்டதால் அடிக்கடி குடிநீர் பைப்லைன் பழுது ஏற்படுவதால் பொதுமக்கள் குடிநீருக்காக அவதிப்படுகிறார்கள். ஆகையால் பொதுமக்களின் நலன் கருதி பழுதான பைப்லைன்களை 02/2023 மற்றும் 03/2023 ஆகிய மாதங்கள் பழுது நீக்கம் செய்த திரு.சுரேஷ்குமார் என்பவருக்கு ரூ.3.40/– இலட்சத்திற்கான

கடன் பட்டியல் தொகையினை குடிநீர் நிதியிலிருந்து வழங்குவதற்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அலுவலக குறிப்பு :**

மன்றம் அனுமதிக்கலாம். (கோ.எண்.489/2022/அ1)

**(ஒம்) திரு.டி.எம்.எஸ்.குணசேகரன்.,**
**நகர் மன்ற தலைவர்,**
**தாரமங்கலம் நகராட்சி,**

**// உண்மை நகல் //**

**ஆணையாளர்,**
**தாரமங்கலம் நகராட்சி.**